**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**
**மானுடவியல் சமூகவிஞ்ஞானங்கள் பீடம்**
**சட்டக் கற்கைகள் திணைக்களம்**
**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டம் - மட்டம் 4**
**LLU4708/LWU2314 – அரசியலமைப்புச் சட்டம் II**
**ஆண்டு இறுதிப் பரீட்சை – 2020/2021 (திறந்த புத்தகப் பரீட்சை)**
**காலம் – மூன்று (03) மணித்தியாலம்**

---

**திகதி : 2021. 09.09.** **நேரம் : மு.ப. 9.30 a.m. – பி.ப12.30**

---

வினாக்களின் மொத்த எண்ணிக்கை 06

**நான்கு (04)** வினாக்களுக்கு மட்டும் விடையளிக்க.

தெளிவற்ற கையெழுத்திற்குப் புள்ளிகள் குறைக்கப்படும்.

1) 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் அத்தியாயம் III இல் குறிப்பிடப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் ஒவ்வொன்றும் முழுமையற்றவை. ஏற்கனவே உள்ள அடிப்படை உரிமைகளின் பரப்பெல்லையினைத் தீர்மானிப்பதிலும் அரசியலமைப்பின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் உத்தரவாதம் அளிக்கப்பட்டுள்ள உரிமைகளின் நோக்கத்தினை தீர்மானிப்பதில் புதிய பரிணாமங்களை அறிமுகப்படுத்துவதிலும் நீதித்துறை முக்கிய பங்கு வகித்துள்ளது. இன்றைய காலத்தில் நவீன சமூகத்தின் சிக்கல்தன்மையினால் அடிப்படை உரிமை மீறல்களுக்கு பரிகாரம் அளிப்பதற்காக பொருத்தமான பொருள்கோடல்களை வழங்குவதில் நீதிபதிகள் சவால்களை எதிர்நோக்கும் காரணமாக அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தின் சாதாரண பொருள்கோடலுக்குள் தம்மைக் கட்டுப்படுத்திக் கொள்கின்றனர்.

a) மேற்போந்த கூற்றுடன் நீர் உடன்படுகின்றீரா? இலங்கையின் அரசியலமைப்பின் பொருத்தமான ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றை மேற்கோள்காட்டி மேற்போந்த கூற்றை ஆராய்க.

(20 புள்ளிகள்)

b) உமது ஆராய்விற்கமைவாக, இலங்கையின் 1978 ஆம் ஆண்டு அரசியலமைப்பின் அத்தியாயம் III இற்குச் செய்யப்பட வேண்டிய சீர்திருத்தங்கள் யாவை? வேறு நியாயாதிக்கங்களிலிருந்து உதாரணங்களைப் பெற்று ஆராய்க.

(5 புள்ளிகள்)

2) கொவிட் 19 உலகளாவிய தொற்றினைத் தொடர்ந்து, 30 சனவரி 2020 அன்று சர்வதேச அக்கறைகளுக்கான பொது சுகாதார அவசர நிலைமையினை (PHEIC) உலக சுகாதார ஸ்தாபனம் (WHO) அறிவித்தது. மார்ச் 2020 இன் ஆரம்பத்திலிருந்து கொரோனா வைரஸினால் இலங்கை பாதிக்கப்பட்டிருப்பதுடன் பல்வேறு மதங்கள் மற்றும் சமூகங்களைச் சேர்ந்த கொரோனா தொற்றாளர்களிடையே மரணங்கள் பல பதிவாகியுள்ளன.

தொற்றுநோய் தொடங்கிய காலத்திலிருந்து, கோவிட் 19 தொற்றுக்குள்ளான நோயாளிகளின் அனைத்துச் சடலங்களையும் அவர்களின் மதத்தைப் பொருட்படுத்தாமல் புதைக்கும் அரசாங்கத்தின் கொள்கைக்கும் நாட்டில் மதங்கள் சிலவற்றின் இறுதிச்சடங்கு தொடர்பான மத அனுசரிப்பு மற்றும் நம்பிக்கைகளுக்குமிடையே மோதல் இருந்து வந்தது. இதற்குப் பதிலளிக்கும் விதமாக, 25 பெப்ரவரி 2021 அன்று சில சுகாதார விதிமுறைகள் சிலவற்றுக்கு அமைவாக கொவிட் 19 இன் தொற்றின் காரணமாக இறந்த மக்களின் உடல்களை தகனம் செய்ய அல்லது அடக்கம் செய்ய அங்கீகாரம் அளிக்கும் அரச வர்த்தமானி நெறிவுறுத்தல் இல. 2216/38 இனை அரசாங்கம் வெளியிட்டது.

சட்டத்தரணிகளின் சுயாதீன அமைப்பொன்றான இலங்கை சட்டச் சங்கமானது ‘கொவிட் 19 உம் இலங்கையின் அடிப்படை உரிமைகளில் அதன் தாக்கமும்’ என்ற கருப்பொருளில் அவர்களுடைய புதிய சஞ்சிகைப்பதிப்பினை வெளியிடுவதற்கு விரும்புகின்றது. சட்டத்தின் நோக்கமானது மக்களுக்கும் சமூகத்திற்குமிடையிலான போட்டியிடும் அக்கறைகளுக்கிடையில் சமநிலையொன்றைப் பேணுவதுடன் தொடர்புடைய என்ற சட்டக் கோட்பாட்டின் மீது கவனம் செலுத்த எதிர்பார்க்கின்றது.

சட்ட மாணவரொருவராக இவ்விடயம் தொடர்பில் சஞ்சிகை ஆக்கமொன்றை எழுத வேண்டும் என நீர் எதிர்பார்க்கப்படுகின்றீர். இலங்கை மக்களின் அடிப்படை உரிமைகளின் பின்னணியில், மேற்போந்த விடயங்களை விளக்கியும் ஆராய்ந்தும் சஞ்சிகைக்கு ஆக்கமொன்றை எழுதுக.

(25 புள்ளிகள்)

3) இலங்கையின் அரசியலமைப்பு வரலாற்றில் முதன்முறையாக அரசியலமைப்பினால் அங்கீகரிக்கப்பட்ட மனிதவுரிமைகளை அமுல்படுத்துவதற்கான சிறப்பான பொறிமுறையை இலங்கையின் 1978 ஆம் ஆண்டின் அரசியலமைப்பு அறிமுகப்படுத்தியது. எனினும், அடிப்படை உரிமை வழக்குகள் தொடர்பில் நடவடிமுறை தேவைப்பாடுகளில் நீதிமன்றின் கடுமையான சார்ந்திருப்பினால் இலங்கையின் அடிப்படை உரிமைகள் சட்டத்தின் விருத்திக்கு ஆரம்ப தீர்ப்புக்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பை அளிக்கவில்லை.

பின்வரும் தேவைப்பாடுகளில் ஏதேனும் **<u>இரண்டினைத்</u>** தெரிந்து இலங்கை நீதிமன்றங்களினால் அவை தொடர்பில் வழங்கப்பட்ட நீதித்துறை பொருள்கோடல்களின் பின்னணியில் ஆராய்க.

a) நிறைவேற்றுத் துறை மற்றும் நிர்வாகத்துறை நடவடிக்கை

b) உரிமை மீறல் அல்லது உடனடி உரிமை மீறல்

c) ஒருமாத விதி

d) வழக்கிடு தகைமை

(12.5 x 2 =25 புள்ளிகள்)

4) அண்மையில் ஆட்சி முறைமைக்குள் அதிகாரப்பகிர்வினை அறிமுகப்படுத்திய தீவொன்றாக சைலன் காணப்படுகின்றது. இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்ட மாகாணசபை முறைமைக்கு ஒத்ததாகவே இவ் அதிகாரப் பகிர்வு காணப்பட்டது. சைலன் தீவின் வட மத்திய மாகாணத்தின் புதிதாகத் தெரிவு செய்யப்பட்ட முதலமைச்சர் மற்றும் அமைச்சர்கள் குழுவினால் அரசியலமைப்பின் 09 நிரலில் உள்ள ஒருங்கிணைவுப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலொன்று தொடர்பில் சட்டமொன்று ஆக்கப்பட்டது. அரசியலமைப்பின் ஒருங்கிணைவுப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலொன்று தொடர்பில் ஆக்கப்பட்ட சட்டத்திற்கமைவாக, குறிப்பிட்ட விடயத்தின் கீழ் வருகின்ற மாகாணத்தின் பரப்பெல்லைக்குட்பட்டதான அரசாங்க ஒப்பந்தங்களினை மாகாண சபையினால் தீர்மானிக்கப்படுகின்ற எந்தவொரு கட்டுமான கம்பனிக்கும் வழங்கப்பட முடியும். ஆறு மாதங்களின் பின்னர், சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் செயற்பட்டு மாகாணத்தினுள் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்றுக்கு சட்டத்தின் அதிகாரத்தின் கீழ் கட்டுமான வேலையினை மாகாண சபை கையளித்தது. கம்பனியானது கட்டுமான வேலையினை ஆரம்பிக்கின்ற போது, அவ் வேலையிடத்திற்கு வருகை தந்த வட மத்திய மாகாணத்தின் ஆளுனர் அவ்வாறான செயற்றிட்டங்களுக்கு அனுமதி வழங்குவது நாட்டின் அரசியலமைப்புக்கு முரணானது என ஊடக சந்திப்பின் போது தெரிவித்ததுடன் செயற்றிட்டத்தினை உடனடியாக நிறுத்துவதற்கும் உத்தரவிட்டார். சில நாட்களின் பின்னர், மாகாண சபையுடன் ஆலோசிக்காது எதிர்க்கட்சியின் பிரதான ஒருங்கிணைப்பாளரினை மாகாண சபையின் முதலமைச்சராக ஆளுனர் நியமித்தார். மாகாண சபையில் பெரும்பான்மையினைத் தக்க வைத்திருந்த முன்னாள் முதலமைச்சரினால் ஆளுனருக்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணையினை நிறைவேற்ற முடிந்தது.

மேற்போந்த சம்பவத்தின் பின்னணியில், பின்வருவனவற்றின் சட்ட அந்தஸ்தினை ஆராய்க.

I. ஒருங்கிணைவுப் பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலொன்றை உள்ளடக்கி சட்டமொன்றினை ஆக்கியதுடன் மாகாண சபையின் நகர்வும் அதனை மாகாணத்தினுள் அமுல்படுத்துவதற்கான மாகாண சபையின் நகர்வு

II. முதலமைச்சரினை பதவியிலிருந்து அகற்றி புதிய முதலமைச்சர் ஆளனரினால் நியமிக்கப்பட்டமை.

III. மாகாண சபையினால் பதவியிலிருந்து ஆளுனரை அகற்றுவதற்கான சாத்தியப்பாடு.

பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகள் மற்றும் தீர்ப்புச் சட்டம் என்பவற்றினால் உமது விடை ஆதாரப்படுத்தப்பட வேண்டும்.

(25 புள்ளிகள்)

5) "….அரசாங்கமானது சாதாரண நியதிச் சட்டத்திற்கு மேலானதொரு உயர்ந்த சட்டத்திற்கமைவாக தன்னுடைய நடாத்தையினைக் கொண்டிருக்கும் என்பதுடன் இவ் உயர்ந்த சட்ட அமைப்பானது அரசியலமைப்பு என்று அழைக்கப்படுகின்ற ஆவணமொன்றில் அல்லது வேறு சில அடிப்படையான சட்டத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் என அரசியலமைப்புவாதக் கோட்பாடு குறிப்பிடுகின்றது. நவீன அரசியலமைப்புவாதமானது அரசாங்கத்தின் அதிகாரங்களை பயன்படுத்துவதில் வலுவேறாக்கம் மற்றும் தனிநபர் உரிமைகள் ஆகிய இரண்டு வகையான மட்டுப்பாடுகளை பொதுவாகச் சுமத்துகின்றது. அரசாங்கத்தின் பல்வேறு கிளைகள் மற்றும் பல்வேறு அரசியல் பிரிவுகளுக்கிடையே அதிகாரத்தினை ஒதுக்குவதன் மூலமும், அரசாங்க ஊடுருவலுக்கு எதிராக சில அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிப்பதன் ஊடாகவும் அரசாங்கத்தின் அதிகாரத்தினை மட்டுப்படுத்தும் முக்கிய வரம்பெல்லைகளான நவீன அரசியலமைப்புக்கள் செயற்படுகின்றன.'

***Keith S. Rosenn (1990)***

இலங்கையின் பொருத்தமான அரசியலமைப்பு ஏற்பாடுகள் மற்றும் அண்மைய அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் என்பவற்றின் பின்னணியில் மேற்போந்த கூற்றை விமர்சனரீதியில் ஆராய்க.

பொருத்தமான தீர்ப்புச்சட்டம் மற்றும் உதாரணங்களால் உமது விடையினை ஆதாரப்படுத்துக.

(25 புள்ளிகள்)

6) காக்வார்ட்ஸ் தீவின் அரசியலமைப்பு பரிணாமப் பேரவைக்கு பரிந்துரைகளை முன்மொழிவதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அங்கத்தவரொருவராக நீர் பெயரிடப்பட்டுள்ளீர். 'மாநகர சபைகளின் நிறைவேற்று மற்றும் சட்டவாக்க அதிகாரங்கள் : சட்டத்தின் பிரயோகம் மற்றும் சவால்கள்' என்ற தலைப்பின் கீழ் பேரவைக்கு அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு நீர் எதிர்பார்க்கப்படுகின்றீர்.

மாகாண சபைகளின் ஆக்க அமைவு, கடமைகள், பொறுப்புக்கள் மற்றும் நிறைவேற்று மற்றும் சட்டவாக்க அதிகாரங்களின் செயல்திறன் ஆகியவற்றை விபரித்து அறிக்கையொன்றைத் தயாரிக்குக.

காக்வார்ட்ஸ் தீவின் மாகாண சபைகள் முறைமையானது இலங்கையின் மாகாண சபைகள் முறைமையினை ஒத்தது எனக் கொள்க

(25 புள்ளிகள்)

*******பதிப்புரிமையுடையது******